இறைவன் கொடுத்த என் பிள்ளை இரவல் ஆனதோ
துவிக்கும் தாயின் போராட்டம் தணியக் கூடுமோ
கனவுகள் கரைந்ததே காரணம் ஏனோ
அழுகிறேன் துடிக்கிறேன் சோதனை தானோ
கருவில் வளர்ந்த என்வாழ்வே கடலில் கரையவோ
உறவை பிரிந்த காயங்கள் புலம்பல் கேட்குமோ
மடியில் தவிழ்ந்த என் மகனே நொடியில் சாகவோ
தினமும் காத்து நான் வழர்த்தேன் இறைவன் எடுக்கவோ
தினம் தினம் தவிக்கிறேன் யார் அறிவாரோ
அழவும் நான் கண்ணீர் இல்லை ஆறுதல் யாரோ
அமுதம் உண்ண அழும்போது நிலவை காட்டினேன்
பனியும் வெய்யிலும் பாக்காமல் வளர்த்த செல்வமே
அலையில் கதறி அழும்போது பாக்க தவறினேன்
நெருப்பில் கொண்டு நான் போட நெஞ்சு வேகுதே
அம்மா என்று இனி என்னை யார் அழைப்பாரோ
பெற்ற நெஞ்சு தீ எரிய யார் அணைப்பாரோ

கலங்கி கலங்கி தவிக்காதே எந்தன் அன்னையே
கடலில் மூழ்கி போனாலும் மீழ்வோம் அன்னையே
வான வெளியில் இருந்தேன் நான் உன்னை பார்க்கிறேன்
வாசல் வரைக்கும் வந்துன்னை தூங்க சொல்கிறேன்
மீண்டும் மீண்டும் பிறப்போமே அன்னை மடியிலே
பிரிந்த உறவை சேர்ப்போமே சொந்த மண்ணிலே